# மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு

## பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

### இலங்கை மத்திய வங்கி

2023 மே
தொகுதி 05 வெளியீடு 05

## முக்கிய பண்புகள்

### மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்




2023 மேயில் வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலா் 1,019 மில்லியனிற்கு 2.7 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) குறைவடைந்தன.

### மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்




2023 மேயில் வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலா் 1,466 மில்லியனிற்கு 1.0 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) சிறிதளவு அதிகரித்தது.

### ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வளர்ச்சி வீதங்கள் (%)




2023 மேயில் முடிவடைகின்ற ஐந்து மாத காலப்பகுதியில் ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் இறக்குமதிச் செலவினம் என்பன முறையே 7.7 சதவீதத்தினாலும் 22.8 சதவீதத்தினாலும் (ஆண்டிற்கு ஆண்டு) குறைவடைந்தன.

### வர்த்தக மீதி (ஐ.அ.டொ. மில்)




வணிகப்பொருள் வர்த்தக கணக்குப் பற்றாக்குறையானது 2022 மேயில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலா் 403 மில்லியனிலிருந்து 2023 மேயில் ஐ.அ.டொலா் 447 மில்லியனிற்கு விரிவடைந்தது.

## முக்கிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வகைகள் - (2023 சன-மே)

ஏற்றுமதிகள் (ஐ.அ.டொ. மில்) | இறக்குமதிகள் (ஐ.அ.டொ. மில்)



# ஏற்றுமதிச் செயலாற்றம்

### ஏற்றுமதிச் செயலாற்றம் - (சன-மே)




### ஏற்றுமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள் - (சன-மே)




கைத்தொழில் மற்றும் கனிப்பொருள் உற்பத்திகளின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட குறைப்பின் முக்கிய காரணமாக 2023 மேயில் முடிவடைகின்ற முதல் ஐந்து மாத காலப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியடைந்தன. இருப்பினும், வேளாண்மை ஏற்றுமதிகளில் அதிகரிப்பொன்று பதிவுசெய்யப்பட்டது.

2023 மேயில் முடிவடைகின்ற ஐந்து மாத காலப்பகுதியில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 2.1 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் ஏற்றுமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண் 9.6 சதவீதத்தினால் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் குறைவடைந்தது.

## வேளாண்மை ஏற்றுமதிகள்

### வேளாண்மை ஏற்றுமதிகள்




### வேளாண்மை ஏற்றுமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### வேளாண்மை ஏற்றுமதிகளின் செயலாற்றம் (சன-மே)




### தேயிலை மற்றும் இறப்பர் விலைகள்*




*2022 யூலை மாதத்திற்கான இறப்பர் (நாடாவாக்கப்பட்டு புகையூட்டப்பட்ட தட்டை இறப்பர்) விலைகள் ஏலத்தில் குறித்துரைக்கப்படவில்லை.

தேயிலை, வாசனைத்திரவியங்கள், கடலுணவு மற்றும் காய்கறிகள் என்பவற்றினால் முக்கியமாக உந்தப்பட்டு 2023 மேயில் முடிவடைகின்ற ஐந்து மாத காலப்பகுதியில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் அதிகரித்தன. இருப்பினும், இக்காலப்பகுதியில், முக்கியமாக தெங்கு, சிறு வேளாண்மை உற்பத்திகள் மற்றும் இயற்கை இறப்பர் என்பவற்றிலிருந்து தாழ்ந்தளவிலான ஏற்றுமதி வருவாய்கள் பதிவுசெய்யப்பட்டன.

# கைத்தொழில் ஏற்றுமதிகள்

### கைத்தொழில் ஏற்றுமதிகள்




### கைத்தொழில் ஏற்றுமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### கைத்தொழில் ஏற்றுமதிகளின் செயலாற்றம் (சன-மே)




### நீர்க்கல மற்றும் வானூர்தி மற்றும் எரிபொருட்களின் ஏற்றுமதி விலைகள்




புடவைகள் மற்றும் ஆடைகள், பெற்றோலிய உற்பத்திகள், இறப்பர் உற்பத்திகள் மற்றும் உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை என்பவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட குறைப்பின் முக்கியமாக காரணமாக, 2023 மேயில் முடிவடைகின்ற ஐந்து மாத காலப்பகுதியில் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியடைந்தன. இருப்பினும், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள், விலங்குத்தீன் மற்றும் அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் என்பவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன.

# இறக்குமதிச் செயலாற்றம்

### இறக்குமதிச் செயலாற்றம் - (சன-மே)




### இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள் - (சன-மே)




இடைநிலை, முதலீட்டு மற்றும் நுகர்வுப் பொருட்கள் ஆகிய சகல முக்கிய இறக்குமதி வகைகள் மீதும் உறப்பட்ட குறைந்தளவிலான செலவினத்தின் காரணமாக 2023 மேயில் முடிவடைகின்ற ஐந்து மாத காலப்பகுதியில் வணிகப்பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, இறக்குமதி அளவுச் சுட்டெண் மற்றும் இறக்குமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண் என்பனவும் முறையே 14.9 சதவீதத்தினாலும் 9.3 சதவீதத்தினாலும் (ஆண்டிற்கு ஆண்டு) அடிப்படையில் குறைவடைந்தன.

## நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள்

### நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகள்




### நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகளின் செயலாற்றம் (சன-மே)




### சீனி, தானியங்கள் மற்றும் பால்மாவின் சராசரி இறக்குமதி விலைகள்




தானியங்கள் மற்றும் ஆலைக் கைத்தொழில் உற்பத்திகள் (முக்கியமாக, அரிசி), ஆடைகள் மற்றும் துணைப்பொருட்கள், வீட்டுப்பாவனைப் பொருட்கள் மற்றும் பாற்பண்ணை உற்பத்திகள் என்பவற்றினால் உந்தப்பட்டு உணவு மற்றும் உணவல்லா நுகர்வுப் பொருட்கள் ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சியின் முக்கிய காரணமாக 2023 மேயில் முடிவடைகின்ற ஐந்து மாத காலப்பகுதியில் நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் (ஆண்டிற்கு ஆண்டு) அடிப்படையில் வீழ்ச்சியடைந்தது. இருப்பினும், சீனி மற்றும் இனிப்புப் பண்டங்கள், மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள், எண்ணெய் மற்றும் கொழுப்புக்கள், தனியாள் வாகனங்கள், குடிபானங்கள் மற்றும் அச்சிடப்பட்ட பொருட்கள் மற்றும் காகிதாதிகள் என்பன மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்துக் காணப்பட்டது.

## இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள்

### இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம்




### இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்



## இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகளின் மீதான செயலாற்றம் (சன-மே)




## மசகெண்ணெய் மற்றும் வளமாக்கியின் இறக்குமதி விலைகள் (மாதாந்த சராசரி)




*2022 மாச்சு, ஏப்பிறல், யூன், யூலை மற்றும் ஒத்தோபர் மற்றும் 2023 பெப்புருவரி ஆகிய மாதங்களில் மசகெண்ணெய் இறக்குமதி செய்யப்படவில்லை.

புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள், எரிபொருள், பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள், மற்றும் அடிப்படை உலோகங்கள் என்பவற்றின் இறக்குமதிகள் மீது உறப்பட்ட தாழ்ந்தளவிலான செலவினங்களின் முதன்மைக் காரணமாக 2023 மேயில் முடிவடைகின்ற ஐந்து மாத காலப்பகுதியில் இடைநிலைப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் (ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில்) வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. மாறாக, பரிசீலனையிற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் வைரங்கள் மற்றும் அருங்கற்கள் மற்றும் உலோகங்கள், கோதுமை மற்றும் சோளம், வளமாக்கிகள், மற்றும் வேளாண்மை உள்ளீடுகள் என்பவற்றின் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்துக் காணப்பட்டது.

# முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகள்

## முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகளின் மீதான செலவினம்




## முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




## முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகளின் செயலாற்றம் (சன-மே)




பொறி மற்றும் சாதனங்கள், கட்டடவாக்கப் பொருட்கள் மற்றும் போக்குவரத்து சாதனங்கள் ஆகிய முதலீட்டுப் பொருட்களின் சகல முக்கிய வகைகளிலும் ஏற்பட்ட தாழ்ந்தளவிலான இறக்குமதிச் செலவினத்தின் காரணமாக 2023 மேயில் முடிவடைகின்ற ஐந்து மாத காலப்பகுதியில் முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது.

## வெளிநாட்டு வர்த்தகப் புள்ளிவிபரங்களின் தொகுப்பு (அ)

### ஏற்றுமதிச் செயலாற்றம் (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | | 2022 மே | 2023 மே | ஆ-ஆ. மாற்றம் (%) | 2022 சன-மே | 2023 சன-மே | ஆ-ஆ. மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | | **190.9** | **225.7** | **18.2** | **974.5** | **1,017.9** | **4.5** |
| இதில் | தேயிலை | 93.7 | 116.3 | 24.2 | 460.9 | 524.0 | 13.7 |
| | தெங்கு | 36.5 | 31.4 | -14.0 | 175.3 | 132.6 | -24.4 |
| | வாசனைத்திரவியங்கள் | 21.1 | 27.0 | 28.0 | 127.8 | 148.2 | 16.0 |
| | கடலுணவு | 16.8 | 23.0 | 36.6 | 105.8 | 114.5 | 8.2 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | | **854.2** | **789.7** | **-7.5** | **4,277.0** | **3,825.2** | **-10.6** |
| இதில் | புடவைகள் மற்றும் ஆடைகள் | 483.9 | 413.9 | -14.5 | 2,408.5 | 2,030.6 | -15.7 |
| | இறப்பர் உற்பத்திகள் | 74.0 | 74.4 | 0.5 | 393.8 | 360.5 | -8.5 |
| | பெற்றோலிய உற்பத்திகள் | 53.0 | 39.1 | -26.2 | 291.1 | 207.8 | -28.6 |
| | உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 42.3 | 47.8 | 12.9 | 222.1 | 208.6 | -6.1 |
| | பொறி மற்றும் எந்திரவியல் சாதனங்கள் | 46.0 | 55.9 | 21.4 | 220.5 | 264.7 | 20.1 |
| | இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 39.0 | 43.9 | 12.5 | 164.2 | 216.4 | 31.9 |
| | தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணிகள் | 5.8 | 6.2 | 6.2 | 30.4 | 27.9 | -8.5 |
| **கனிமம் மற்றும் ஏனைய ஏற்றுமதிகள்** | | **3.2** | **4.2** | **29.5** | **21.9** | **22.5** | **2.9** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | | **1,048.3** | **1,019.5** | **-2.7** | **5,273.4** | **4,865.7** | **-7.7** |

### இறக்குமதிச் செயலாற்றம் (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | | 2022 மே | 2023 மே | ஆ-ஆ. மாற்றம் (%) | 2022 சன-மே | 2023 சன-மே | ஆ-ஆ. மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | | **177.1** | **292.9** | **65.4** | **1,353.7** | **1,241.7** | **-8.3** |
| **உணவு மற்றும் குடிபானங்கள்** | | 107.3 | 198.7 | 85.2 | 767.8 | 698.7 | -9.0 |
| இதில் | காய்கறிகள் (ஆ) | 24.7 | 39.2 | 58.6 | 147.5 | 139.3 | -5.6 |
| | அரிசி | 13.7 | 1.8 | -86.8 | 154.6 | 7.6 | -95.1 |
| **உணவல்லா நுகர்வுப் பொருட்கள்** | | 69.8 | 94.2 | 35.0 | 585.8 | 543.1 | -7.3 |
| இதில் | மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 31.5 | 47.9 | 52.2 | 230.7 | 306.4 | 32.9 |
| **இடைநிலைப் பொருட்கள்** | | **1,036.1** | **970.5** | **-6.3** | **5,842.7** | **4,571.1** | **-21.8** |
| இதில் | எரிபொருள் | 461.4 | 429.8 | -6.9 | 2,383.8 | 2,064.8 | -13.4 |
| | புடவை மற்றும் புடவைப் பொருட்கள் | 243.0 | 212.7 | -12.5 | 1,404.7 | 999.9 | -28.8 |
| | வளமாக்கிகள் | 2.4 | 11.5 | 378.4 | 44.5 | 61.6 | 38.5 |
| | கோதுமை மற்றும் சோளம் | 21.4 | 32.6 | 52.6 | 124.1 | 146.9 | 18.4 |
| **முதலீட்டுப் பொருட்கள் மற்றும் ஏனையவை** | | **238.3** | **202.9** | **-14.8** | **1,605.3** | **978.6** | **-39.0** |
| இதில் | பொறி மற்றும் சாதனம் | 150.1 | 132.0 | -12.1 | 1,024.9 | 658.8 | -35.7 |
| **மொத்த இறக்குமதிகள்** | | **1,451.5** | **1,466.3** | **1.0** | **8,801.7** | **6,791.4** | **-22.8** |

### வர்த்தக நிலுவை (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | 2022 மே | 2023 மே | ஆ-ஆ. மாற்றம் (%) | 2022 சன-மே | 2023 சன-மே | ஆ-ஆ. மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **வர்த்தக நிலுவை** | -403.2 | -446.8 | | -3,528.3 | -1,925.7 | |

### வர்த்தகச் சுட்டெண்கள் மற்றும் வர்த்தக மாற்று விகிதம் (2010 = 100) (இ)

| விடயம் | | 2022 மே | 2023 மே | ஆ-ஆ. மாற்றம் (%) | 2022 சன-மே | 2023 சன-மே | ஆ-ஆ. மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏற்றுமதி** | | | | | | | |
| | பெறுமதிச் சுட்டெண் | 145.9 | 141.9 | -2.7 | 146.8 | 135.4 | -7.7 |
| | அளவுச் சுட்டெண் | 162.5 | 168.4 | 3.6 | 160.2 | 163.6 | 2.1 |
| | அலகுப் பெறுமதிச் சுட்டெண் | 89.8 | 84.3 | -6.1 | 91.6 | 82.8 | -9.6 |
| **இறக்குமதி** | | | | | | | |
| | பெறுமதிச் சுட்டெண் | 129.9 | 131.2 | 1.0 | 157.5 | 121.6 | -22.8 |
| | அளவுச் சுட்டெண் | 104.8 | 119.8 | 14.3 | 147.1 | 125.1 | -14.9 |
| | அலகுப் பெறுமதிச் சுட்டெண் | 124.0 | 109.6 | -11.6 | 107.1 | 97.1 | -9.3 |
| **வர்த்தக மாற்று விகிதம்** | | 72.4 | 76.9 | 6.2 | 85.6 | 85.2 | -0.4 |

(அ) தற்காலிகமானது

(ஆ) தானியங்கள், வெங்காயம், உருளைக்கிழங்குகள், அவரை வகை காய்கறிகள் மற்றும் ஏனையவற்றினை உள்ளடக்கியுள்ளது

(இ) ஐ.அ.டொ. நியதிகளில்